மாண்புமிகு திரு மா. முத்துசாமி : ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலைகளில் அது 12-வது வரிசையில் இடம் பெறுகிறது. மாவட்ட வளர்ச்சி மன்றத்தால் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலைகள் முடிந்தால் நிதிநிலை இடம் கொடுக்கும்போது அது நீடிக்கப்படும்.

Sethusamudram Canal Scheme.

*** 335 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR—Thiru V. K. KOTHANDARAMAN: Will the Hon. the Minster for Labour be pleased to place on the Table of the House a copy of the report on the Sethusamudram Canal Project submitted to Union Government ?**

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : அறிக்கையின் நகல் ஒன்று தமிழ்நாடு சட்டமன்ற நூலகத்தில் உள்ளது.

திரு வி. கே. கோதண்டராமன் : இந்த சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்தை உடனடியாக முடிப்பதன்மூலம் விலைவாசிகளில் குறைவு ஏற்படும் என்றளவிற்கு ஒரு சூழ்நிலை இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே அதை முன்னிட்டாவது இதை எவ்வளவு விரைவில் முடிக்க ஏற்பாடு செய்யமுடியுமோ அந்தளவிற்கு எடுத்துக் கொள்ளப் படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. திட்டக் கமிஷன் ஒப்புதல் வந்தவுடன் வேலை தொடங்கப்படும்.

திரு எஸ். இராமச்சந்திரன் : இந்த சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்திற்கான அனுமதி கோரி எப்போது இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது ? இதனால் என்னென்ன நன்மைகள் விளையும் என்று அரசு எதிர் பார்க்கிறது ? வட நாட்டில் கண்ட்லா துறைமுகத்தை இலவசத் துறை முகமாகச் செப்பனிட்டார்கள். அதைவிட அதிக நன்மை இதனால் கிடைக்குமா கிடைக்காதா என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : திட்டக்குழுவிற்கு 1964-ல் அனுப்பப்பட்டு விட்டது என்று கருதுகிறேன். 1969-ல், அதாவது இந்த ஆண்டு ஒப்புதல் கிடைக்கும். அப்படி ஒப்புதல் கிடைத்தால் 1974-ம் ஆண்டில் இது நமக்கு வருவாய் தரக்கூடும். இதனால் ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு 232 லட்சம் ரூபாய் வருவாய் கிடைக்கக்கூடும். இந்தக் கால்வாய் மூலம் 360 மைல் அளவிற்குக் கப்பல் பிரயாணம் குறையும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு $4\frac{1}{2}$ சதவீதம் வட்டி, செலவு எல்லாம் போக மொத்தம் 70 லட்சம் மிச்சம் வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

திரு சி. வீரமணி : சேதுசமுத்திரக் கால்வாய் திட்டம் நீண்ட பெருங்காலமாக மத்திய அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டு வந்த ஒரு திட்டமாகும். 1967-க்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர்கள், இதனால் கப்பல் வாணிபம் அதிகமா .. என்றும், தமிழ் நாட்டுக்கு இதனால் ஒரு பாதுகாப்பான முறை ஏற்படும் என்றும் மத்திய அரசுக்கு ஏகமனதாக எடுத்துரைத்து வந்ததால் தற்போது இது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. அந்தத் திட்டத்தை விரைவாக ஏற்படுத்துவதற்கு தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : இதையெல்லாம் கருதி மத்திய அரசினிடம் கேட்கப்பட்டிருக்கிறது. ஒப்புதல் வந்தவுடன் வேலை துவங்கப் படும்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் அமலுக்கு வர கேட்டிருப்பதுபோல் அத்துடன் தூத்துக்குடி ஆழ்கடல் திட்டத்தையும் சேர்த்து கேட்கப்பட்டிருக்கிறதா ?